**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தின் ஒரு பொருளின் ஒவ்வொரு பகுதியும் அதன் மொத்த விலையுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க செலவைக் கொண்டதாக தனித்தனியாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் மொத்தக் கிரயம் ரூபா 134,683,729 ஆன நிலாவெளி பயிற்சி நிலைய கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச் காணி, காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக மீளாய்வாண்டின்போது இனங்காணப்பட்டு கட்டிடத்தின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் கட்டிட தேய்மானம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணங்களாக 13 மாவட்டங்களுக்கான மொத்தம் ரூபா 1,248,798 அடையாளம் காணப்படாத 1998 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதியொன்றுக்கான சொத்துக்கள் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின்போது நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் நிகர தேறிய பெறுமதி ரூபா 76,195 ஆக இருந்தது. | இனங்காணப்படாத மீதியாக முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்கள் இனங்காணப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்திற்கான சொத்துக்களை அடையாளம் காணும் வகையில் கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் 2023 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 78,542,085 ஆன நிதியத்தின் சொத்துக்களை (நிலாவெளி தவிர்த்து) சான்றுறுதிப்படுத்துவவதற்கு மீளாய்வாண்டின்போது முடியாதிருந்தது. | சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்களுக்கான பொருள் கணக்கெடுப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருவதுடன் அப்பணிகள் நிறைவடைந்த பின்னர் அந்த அறிக்கை கணக்காய்வு நடவடிக்கைகளுக்க சமர்ப்பிக்கப்படும். | நிதியத்திற்குரிய சொத்துக்களை இனங் காணக்கூடியவாறு கணக்கெடுப்பு கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஏப்ரல் 6 அன்று, சமுர்த்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிலையத்திற்கு வழங்கப்பட்ட 2 நடமாடும் வளிப்பதனாக்கி இயந்திரங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு மீளாய்வாண்டின்போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் 2023 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கையின் மூலமும் உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த இரண்டு நடமாடும் வளிப்பதனாக்கி இயந்திரங்களும் நிலாவெளி பயிற்சி நிலையத்தில் பராமரிக்கப்படும் இருப்புப் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதன் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 941,280 கணக்காய்வுக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுககான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அட்டுறு செலவினங்களாகக் கணக்கிடப்படவில்லை மற்றும் 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் புதிய மானியமாக 6 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தொகையிலிருந்து ரூபா 8,567,239 ஆன தொகையொன்று சமுர்த்தி திணைக்களத்திற்கு மாவட்ட அலுவலகங்களின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் 2023 திசெம்பர் 31 வரை இந்தத் தொகை நிதியத்திற்கு வழங்கப்படவில்லை. திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கிலும் இந்தத் தொகை காட்டப்படவில்லை. | இந்த பணம் தொடர்பாக திணைக்களத்தின் நிதிப்பிரிவிடமிருந்து வழங்கப்பட்ட அறிக்கை நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அறிவுறுத்தலின்படி விசாரணை நடாத்தி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு பெற வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை. நிதிப்பிரமாணம் 381(1) | 2017 ஆம் ஆண்டு முதல் வங்கி நடைமுறைக் கணக்கொன்று பேணப்பட்டு வருகின்ற போதிலும், இவ்வறிக்கைத் திகதி வரை திறைசேரி அங்கீகாரம் பெறப்படவில்லை. | திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிய ஆவணங்களைத் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக தலைமை கணக்காளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 | 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளை நடைமுறைப் படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட | எதிர்வரும் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு நடப்பாண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொது | 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 877(1)(இ) | திறைசேரியின் அங்கீகாரததைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதியொன்று அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் , அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திறைசேரியின் அங்கீகாரததைப் பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்தின் தலைமை கணக்காளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக . | |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 9 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 880 | பயிற்சி நிலையத்தின் காசோலைகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் பிணைத்தொகை செலுத்தப்படவில்லை. | காசோலைகளில் கையெழுத்திடும் அதிகாரிகள் பிணைத் தொகையை வைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படுவதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) | நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை சமர்த்தி அபிவிருத்தி திணைக்கள செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதால் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நிதியத்திற்காக தனிப்பட்ட செயலாற்றல் அறிக்கை யொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,329,823,802 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,328,591,826 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,001,231,976 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. பங்களிப்புத்தொகை குறைவடைந்தமை இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருதாரமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் புதிதாக 6 இலட்சம் மக்களுக்கு சமுர்த்தி மானியங்களை வழங்குவதற்காக அவர்களை வலுப்படுத்துவதற்காக 5,000 ஏற்றுமதி | புதிய சமுர்த்தி மானியங்களை வழங்குவதற்காக சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து | பயனாளிகளின் பங்களிப்புத்தொகை ஆக்கபூர்வமாக குறிப்பிட்ட |

| | | |
|---|---|---|
| கிராமங்களை உருவாக்குதல் மற்றும் அதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் டொலர்கள் சம்பாதிக்கும் பொருளாதாரப் பிரிவொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் உரிமைகளை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் தொடக்க நிகழ்ச்சிகளை நடாத்துதல் , பிரதேசச் செயலகப்பிரிவு மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 350 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா 144,733,844 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக சமுர்த்தியாளர்களின் மானியத் தொகையிலிருந்து ரூபா 500 வீதம் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 143,075,654 பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. இப்பெறுமதியில் ரூபா 96,612,500 ஆனது 2023 பெப்ரவரி மாத சமுர்த்தி மானியத் தொகையிலிருந்து நேரடியாக அறவிடப்பட்டிருந்தது. ஆனால் மேற்கூறிய நோக்கங்கள் அடையப்படாத காரணத்தால் நிதியத்திலிருந்து செய்யப்பட்ட செலவானது விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | செலவிடப்பட்ட ரூபா 144,731,154 ஆன தொகையிலிருந்து 2024.04.01 இல் இன்னும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,002,690 ஆகும். | நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலாவெளி பயிற்சி நிலையம் அமைந்துள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிலப்பரப்பு 7 ஏக்கர் 3 றூட் 28 பேர்ச்சஸ் ஆகும். ஒரு நாளைக்கு ரூபா 2000 வீதம் தினக்கூலி செலுத்தும் அடிப்படையில் இரண்டு தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு செலுத்தப்படுகின்ற வருடாந்த கூலி ரூபா 1,596,400 ஆகும். 2023 ஆம் ஆண்டில் பயிர்ச்செய்கை வருமானம் (மாம்பழம்) ரூபா 7000 மட்டுமே ஆகும். நிலையத்தினால் விவசாய ஆலோசகரின் ஆலோசனை பெறப்படாது ரூபா 75,055 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு பயிரிடப்பட்ட குறுகிய கால பயிர்கள் அழிவடைந்திருந்தன. செலுத்தப்பட்ட ஊழியர் சம்பளம் மற்றும் நிலப்பரப்புடன் ஒப்பிடும்போது பயிர்ச்செய்கையின் மூலம் வருமானத்தை ஈட்டுவதற்கு காணி பயிர்ச்செய்கைக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விவசாய ஆலோசகர் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகாரி ஆகியோரின் ஆதரவுடன் நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிர்ச்செய்கையொன்று 2022 ஆம் ஆணடில் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இது தடாகம் சார்ந்த நிலமொன்று என்பதால் குறுகிய கால பயிர்ச்செய்கைக்கான சுற்றுச்சூழல் நிலைமைகள் பொருத்தமற்றதென கண்டறியப்பட்டமை மற்றும் இயற்கை காரணங்கள் மற்றும் விலங்குகளால் ஏற்படும் அழிவுகள் காரணமாகவும் நீண்ட காலப் பயிர்ச்செய்கை தொடர்ந்தும் காணப்பட்டதாக. | காணி ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு உறுதிப் பத்திரத்தின்(சான்றுப் பத்திர இலக்கம் 08) 6(9) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் நம்பிக்கைப்பொறுப்புச் சபை தலைவராக செயற்படுகின்ற சமர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் நம்பிக்கைப்பொறுப்புச் சபை கூட்டத்திற்காக றெப்படுகின்ற படிகளுக்கு மேலதிகமாக 2020 பெப்ரவரி முதல் மீளாய்வாண்டின் ஒக்டோபர் வரை ரூபா 984,323 அதாவது திணைக்களத்தின் வழக்கமான பதவியின் அடிப்படைச் சம்பளத்தின் ¼ கடமைகளை நிறைவேற்றுவதற்காக பதில் கடமை கொடுப்பனவாக பெறப்பட்டிருந்ததுடன் தற்போதைய தலைவராலும் 2023 நவம்பர் முதல் திசெம்பர் மாதம் வரை மொத்தம் ரூபா 53,887 மேற்குறிப்பிட்வாறு பதில் கடமை கொடுப்பனவு பெறப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுகளை செலுத்துவது தொடர்பாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைகளின் பிரகாரம் எப்போதாவது நம்பிக்கைப்பொறுப்பு உறுதிப் பத்திரத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை சேகரிப்பதற்கு நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக. | நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதிப் பத்திரத்தின் பிரகாரம் பதில் கடமை கொடுப்பனவொன்று செலுத்தப்பட முடியாததுடன் அதற்கிணங்காத தொகை அறவிடப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலாவெளி பயிற்சி நிலையத்தில் உள்ள பௌசர் வாகனத்தைப் பயன்படுத்தி வறட்சியின் போது பொதுமக்களுக்கு நீர் விநியோகச் சேவைகளை வழங்குவதன் மூலமும் வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலமும் வருமானம் ஈட்டக்கூடிய சாத்தியம் காணப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆணடு முதல் 04 ஆண்டுகளாக அவ்வாகனத்தைப் பயன்படுத்தி வருமானத்தை ஈட்டுவதற்கு நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அவ்வாகனம் பாதுகாப்பற்ற முறையில் நிலையத்தின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான வாகனங்களைப் பயன்படுத்துவதற்கும், தேவையுள்ள அரச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்காக எவ்வித கோரிக்கைகளும் கிடைக்கப்பெறவில்லை எனவும் மற்றும் இது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் தீர்மானமொன்று எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |